2008 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

188—

தரம் உயர்த்துதல்

***5147—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, கடலியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தங்கள் அனுமதியோடு திருத்திய விடையினைப் படிக்கிறேன்:*

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 202, பள்ளிக் கல்வி, நாள், 10-8-2007-ல், 2007-2008 ஆம் கல்வியாண்டில் 'அனைவருக்கும் கல்வி' என்ற மைய அரசின் திட்டத்தின்கீழ், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, கடலியில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.*

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேல்மலையனூர் தொகுதியிலுள்ள கடலி ஆரம்பப் பள்ளியைக் கடந்த ஆண்டு நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு அந்தக் கடலி ஊராட்சி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், அந்தப் பள்ளியின் அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சுற்றுச் சுவர், போதிய ஆசிரியர் நியமனம் உள்ளிட்டவற்றை நிறைவேற்றிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

[2008 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய விவரங்களின்படி இப்போது ஒரேயொரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் மாத்திரம் அந்தப் பள்ளியிலே காலியாக இருக்கிறது என்று அறிகிறேன். மிக விரைவில் அந்தப் பணியிடமும் நிரப்பப்படும். அங்கே போதுமான இட வசதிகள் இருக்கின்றன. எனவே, வரக்கூடிய ஆண்டுகளிலே தேவைப்படக்கூடிய வகுப்பறைகளையும் உருவாக்கக்கூடிய முயற்சிகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பள்ளிக் கல்வித் துறைக்குப் பல்வேறு மாற்றங்களை நவீன காலத்திற்கேற்ப, கல்வி முறையை தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய செயல்களை எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்கூட பாராட்டியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே தொடர்ந்து அவருடைய பணிகள் சிறக்க, நானும் இந்த நேரத்திலே என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியானது மிக மிகப் பின்தங்கிய மக்கள் வாழ்கிற பகுதி. எனவே, அங்கே பல்வேறு பள்ளிகள் இப்போது தரம் உயர்த்தப்பட வேண்டிய நிலை இருந்தாலும்கூட, குறிப்பாக, நொச்சலூர் என்கிற ஊராட்சியில் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் ஏறக்குறைய 361 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அங்கேயிருந்து அவர்கள் மேல் கல்வியைப் பெற வேண்டும் என்று சொன்னால், 7 கிலோ மீட்டருக்கு மேல் பக்கத்தில் இருக்கிற அவலூர்ப்பேட்டை மேல்நிலைப் பள்ளிக்குச் சென்றுதான் கல்வி பெற வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இந்த ஆண்டிலே 8 ஆம் வகுப்பிலே மட்டும் 76 மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னதாக முன்மொழிவுகளும் அதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டிலே அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

2008 ஏப்ரல் 30]

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: எனவே, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய முன்மொழிவுகள் இருக்கும் என்று சொன்னால், அவலூர்ப்பேட்டை சென்று வரக்கூடிய அவலத்தைத் தீர்ப்பதற்கு அரசு நிச்சயமாக முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

189—

புறவழிச் சாலை

***8246—திரு. ஆ. அருண்மொழிதேவன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் பணியைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன் :

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்தப் பணி, 31-12-2008 ஆம் தேதிக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரம், அருள்மிகு நடராஜர் திருக்கோயில்